# உறவுகள் எதற்காக?



## உறவுகள் எதற்காக?

உறவுகள் என்பது அடுத்தவரை சேர்த்துக்கொள்வதற்கான ஏக்கம்தான். அவர்கள் எப்படி இருக்கிறார்களோ அப்படியே உங்களுக்குள் ஒரு பாகமாக ஏற்றுக்கொண்டால், அவர்கள் எப்படி இருந்தாலும் சரி, உங்களுடன் நெருக்கமாய் இருப்பார்கள். உங்களுக்கு மிக அற்புதமானவர்களாக இருப்பார்கள்.

சத்குரு ஜகிவாசுதேவ்



உங்களது உறவுகளின் அடிப்படையே, நீங்கள் அடுத்தவரை கவனிக்க விருப்பமாக இருக்கிறீர்களா என்பதுதான், இல்லையா? அடுத்தவர் என்ன சொல்கிறார் என்பதை நீங்கள் கேட்க முடியாத போது, உங்களது உறவுகள் மோசமடைகின்றன. (அனைவரும் சிரிக்கின்றனர்). எல்லாவற்றையும் நீங்களே சொல்ல விரும்பினால் அங்கு உறவே இருக்காது. தற்போது இருக்கும் நிலையில், உங்களில் பெரும்பாலானோருக்கு உங்களது உறவுகளின் தரம்தான் உங்கள் வாழ்க்கைத் தரத்தையும் நிர்ணயிக்கின்றது. நீங்கள் எப்படிப்பட்ட உறவுகளை உங்களது வாழ்க்கையில் கொண்டுள்ளீர்களோ, அதுதான் உங்கள் வாழ்வின் தரத்தையே பெருமளவுக்கு நிர்ணயிக்கின்றது.

உங்களது வாழ்க்கையில் அந்த அளவுக்கு முக்கியத்துவத்தைப் பெறுகின்ற இதை நீங்கள் சிறிது கவனிக்க வேண்டும். உறவுகளின் அடிப்படை என்ன? உறவுகள் மனிதர்களுக்கு எதற்காகத் தேவைப்படுகின்றன? பலவிதமான நமது தேவைகளைப் பூர்த்தி செய்ய வெவ்வேறு விதமான உறவுமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த தேவைகள் உடல்ரீதியாகவோ, மனரீதியாகவோ, உணர்வுரீதியாகவோ அல்லது சமூக, பொருளாதார, அரசியல் என எந்தவிதத்தைச் சேர்ந்ததாகவும் இருக்கலாம். ஆனால் ஒரு மனிதனுக்குள் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்ய, உறவுமுறைகள் பல்வேறு தளங்களில் நிலைநிறுத்தப்பட்டுள்ளன.

உறவுகளின் தன்மை எப்படிப்பட்டதாக இருந்தாலும், உறவு முறைகள் எப்படிப்பட்டதாக இருந்தாலும், உங்களுக்குள் நிறைவு கொள்ளும் தேவை இருப்பதுதான் அடிப்படையான விஷயம். 'இல்லையில்லை, எனக்கு எதுவும் பெறவேண்டிய தேவை இல்லை, நான் கொடுக்க மட்டுமே விரும்புகிறேன்' என்று கூறலாம். கொடுக்க வேண்டும் என்பதைக் கூற பெறுவதைப்போலவே ஒரு தேவைதான். இல்லையா? நான் யாருக்கோ ஏதோ ஒன்றைக் கொடுக்கவேண்டும் என்பது கூட, நான் ஏதோ ஒன்றை பெறவேண்டும் என்பதைப் போன்றதுதான். எந்தவிதமான தேவையாக இருந்தாலும் சரி, ஆனால் அங்கு ஒரு தேவை இருக்கின்றது. விதவிதமான தேவைகளைப் பொறுத்து உறவுகள் வெவ்வேறு விதமாக மாறுபடலாம். ஓர் உறவுமுறையை ஏற்படுத்திக் கொண்ட உடனே, அது ஒரு தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. அந்தத் தேவையை அது பூர்த்தி செய்யாத போது உறவு மோசமடையத் தொடங்குகின்றது. எந்த நோக்கத்திற்காக உறவுகளை ஏற்படுத்திக் கொண்டாலும், தேவைகளும், எதிர்பார்ப்புகளும் நிறைவேறாத போது உறவுகள் மோசமடைகின்றன. எனவே அதை வைத்து மிக அபத்தமாக ஏதேனும் செய்து கொண்டிராமல், அது என்ன என்பது பற்றியும், அதை எப்படி நாம் கையாளுவது என்பதைப்பற்றியும் நேரடியாக பார்ப்பதே சிறந்தது.

மனிதனுக்குள் ஒரு முழுமையற்ற தன்மை இருப்பதால் தான், தேவை என்பதை ஏற்படுகின்றது. தங்களுக்குள் முழுமையை உணர்ந்திட வேண்டிதான் மக்கள் உறவுகளையே உருவாக்குகின்றனர். உங்களுக்கு நெருக்கமானவர்களுடன் ஒரு நல்ல உறவு இருக்குமானால் நீங்கள் முழுமை பெற்றவர்களாக உணருகிறீர்கள். உங்களுக்கென்று ஒரு உறவு இல்லையெனில் நீங்கள் முழுமையில்லாதவராக உங்களை உணர்கிறீர்கள். இது எதனால்? உயிர்த்தன்மை, தன்னிலேயே முழுமை பெற்ற ஒன்று. ஏன் தன்மை முழுமையின்றி உணர்கிறது? ஏன் இது இன்னொரு உயிருடன் கூட்டு சேர்ந்து முழுமை அடைய முயற்சிக்கிறது? அடிப்படையான காரணம் என்னவெனில் இந்த உயிரை நாம் அதன் முழு பரிமாணத்திற்கும் விரிவடையச் செய்யவில்லை. இதுவே அடிப்படையான காரணமாக இருந்தாலும் உறவுகளுக்குள்ளேயே ஒரு சிக்கலான செயல்முறையும் இருக்கின்றது. அது மேலும் மேலும் வளர்ந்து கொண்டே செல்லும் எதிர்பார்ப்புகள்தான், பலர் உருவாக்குகின்ற எதிர்பார்புகளை, இந்த பூமியில் வாழும் எந்த ஒரு மனிதனும் எப்போதுமே நிறைவேற்ற இயலாது.

குறிப்பாக இந்த ஆண், பெண் இடையிலான உறவுமுறைக்குள் இருக்கின்ற எதிர்பார்புகளை, அவர்கள் தேவதைகளையும் கடவுளையுமே திருமணம் செய்து கொண்டால் கூட அவர்களாலும் நிறைவேற்ற முடியாது. தோற்றுப் போவார்கள். ஏனென்றால் சிறிது கூட யதார்த்த நிலைக்குப் பொருத்தமே இல்லாத அந்த எதிர்பார்ப்புகளை யாராலும், எப்போதுமே நிறைவேற்ற இயலாது. மேலும் அந்த எதிர்பார்ப்புகளையோ, அல்லது அவற்றின் மூலத்தையோ புரிந்து கொள்ள முடியாததால், யாராலுமே அவற்றை நிறைவேற்ற இயலாது. ஏனென்றால், நீங்கள் இந்த எதிர்ப்பார்ப்புகளின் மூலத்தை அறிந்து கொண்டால், ஒரு மிக அழகான துணையை உருவாக்கிக் கொள்ள இயலும். நீங்கள் இதற்குத் தயாரா? ஒரு குறிப்பிட்ட நாளில், ஜேக்கும், ஜில்லும்... இப்போது நான் இந்த ஜோக்கை கலாசாரத்திற்கு தகுந்தாற்போல் மாற்றிச் சொல்ல முயற்சிக்கிறேன். ஜேக்கும், ஜில்லும் ஒரு நாள் மலையின் மீது ஏறிக் கொண்டிருந்தார்கள். ஜேக் ஒரு கையில் கோழியை சுமந்து கொண்டு வாளியை பிடித்துக் கொண்டு இருந்தான். மற்றொரு கையில் ஒரு கடப்பாரையையும் ஒரு கயிற்றையும் பிடித்திருந்தான். அந்தக் கயிற்றின் மறுமுனையில் ஒரு ஆடு கட்டப்பட்டிருந்தது. மலையின் மீது ஏறிக் கொண்டிருக்கையில் திடீரென்று ஜில், "நான் மிகுந்த நடுக்கமான உணர்கிறேன்" என்று சொன்னாள். ஜேக், "ஏன்?" என்றான். அதற்கு ஜில் "நான் மட்டும் தனியாக உன்னோடு இருப்பதால் மிகவும் பயமாக உள்ளது" என்றாள். அதற்கு ஜேக், " என் இரு கைகளிலும் பொருட்கள் இருக்கின்றன. நான் உன்னை எதுவுமே செய்யவில்லை. நீ என்ன சொல்கிறாய்? " எனக் கேட்டான். அதற்கு ஜில், " நீ கடப்பாரையை மண்ணில் ஊன்றி அதில் ஆட்டை கட்டிவிட்டு, கோழியை கீழே வைத்து வாளியை வைத்து முடிவிடுவாய். நீ இப்படிச் செய்யக் கூடியவன் தானே?" என்றாள்.

உறவுகள் ஏற்படுத்திக்கொள்வதில், முதன் முதலாக ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது வேண்டுமானால் எதிர்பார்ப்புகள் பொதுவானதாக இருக்கலாம். ஆனால் வாழ்க்கையில் அடுத்தடுத்து படிகள் எடுக்கும் போது, எதிர்பார்ப்புகள் வேறுபடுகின்றன. ஏனென்றால் இந்த எதிர்பார்ப்புகள் மக்களிடம் மாறிக்கொண்டேயிருப்பவை. நிலையானதல்ல. நிலையானதாக இருக்கவும் முடியாது. ஒரு நபர் வேண்டுமானால் நிலையாக வாழ்நாள் முழுவதும் ஒரே எதிர்பார்ப்பை வைத்திருக்கக் கூடும். ஆனால் அடுத்தவருடைய வாழ்க்கை அனுபவமும் புரிதலும் மாறிக் கொண்டே இருப்பதால் எதிர்பார்ப்பு மாறிக்கொண்டேயிருக்கும். இப்படி இருக்கும்போது உறவுகள் போராட்டம் நிறைந்ததாக ஆகிவிடுகிறது.

வீட்டின் நான்கு சுவர்களுக்குள் நிகழும் போரைப்போல் உலகின் எந்த மூலையிலும் போர் நடப்பதில்லை. வெடிகுண்டுகள் எதுவும் அங்கே வெடிக்காததால் உங்களால் எந்த சத்தத்தையும் கேட்க முடிவதில்லை. அவர்கள் ஒருவொருக்கொருவர் மௌன சிகிச்சையையே தந்து கொள்கின்றனர். மக்களுடைய எதிர்பார்ப்புகள் மாறிக்கொண்டே இருப்பதால் இப்படி நிகழ்கிறது. அனைவரது எதிர்பார்ப்புகளும் ஒரே வேகத்தில் மாறுவதில்லை, இதன் வேகம் நபருக்கு தகுந்தாற்போல் வித்தியாசப்படுகிறது. ஒரு நபர் மிக வேகமாக தனது எதிர்பார்ப்புகளை மாற்றிக்கொள்கிறார், அடுத்தவர் அப்படி வேகமாக மாற்றுவதில்லை. இவற்றை வைத்துக்கொண்டு சர்க்கஸ் செய்வது போல் உறவுகளை நிர்வகித்தால், ஒரு அழகான உறவுமுறை நிகழ வாய்ப்பில்லை என்பதை 100% உறுதியாகச் சொல்லமுடியும். நீங்கள் அடுத்தவர் மனநிலையைப் படித்து, அவர்களது எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற தொடர்ந்து முயற்சி செய்தால் நீங்கள்தான் அழிந்துபோவீர்கள். அப்படி நீங்கள் ஏற்கனவே முயற்சி செய்துள்ளீர்கள். இல்லையா? அடுத்தவருடைய மனநிலையைப் புரிந்துகொண்டு அவர்களது எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முயற்சி செய்தால் நீங்கள்தான் மென்மேலும் சிதைவிற்கு ஆளாவீர்கள். இந்த வழியில் சென்றால், இது முடிவேயில்லாத சர்க்கஸ்தான், ஏதோ ஓரளவிற்கு செய்யத்தான் வேண்டும், ஆனால் அது ஒரு அழகான உறவுமுறைக்கு அடித்தளம் அல்ல.


## வாசகர்களே!

அப்ளை அண்டு ஜாயின் இதழ் 2009 ஜனவரி முதல் வார இதழாக வெளிவருகிறது. ஓர் ஆண்டில் 52 வாரங்களுக்கு நீங்கள் ரூ.416 செலுத்துவதற்கு பதிலாக, ஆண்டுச் சந்தாவாக ரூ.300 மட்டும் செலுத்தினால் போதும். அப்ளை அண்டு ஜாயின் இதழ் வாராவாரம் உங்கள் வீடு தேடி வரும். 6 மாதச் சந்தாவாக ரூ. 160 மட்டும் செலுத்தலாம்.




பணத்தை சந்தோஷ் பப்ளிகேஷன்ஸ் (Santhosh Publications) என்ற பெயரில் சென்னையில் மாற்றத்தக்க வகையில் வரைவோலையாகவோ (DD), மணியார்டராகவோ கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பலாம். அல்லது SBI வங்கியின் அயனாவரம் கிளையில் 'சந்தோஷ் பப்ளிகேஷன்ஸ்', நடப்புக்கணக்கு எண்: 30569172979 ல் டெபாசிட் செய்து அதன் ரசீதை கீழ்க்காணும் முகவரிக்கு உங்கள் தெளிவான முகவரி மற்றும் தொலைபேசி எண்ணோடு அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறோம். தபால் கட்டணம் இலவசம்.

ஆசிரியர்,
அப்ளை அண்டு ஜாயின்,
புது எண்-90, கொன்னூர் நெடுஞ்சாலை,
அயனாவரம், சென்னை-600 023.

